# ஜனாதிபதிக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை வழக்கு

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 31 இதழ் 286
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-11-1994

## ஐ. தே. க. நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டதற்கு எதிராக தேர்தல் ஆடசேபனை வழக்கொன்றை தாக்கல் செய்வதற்கு ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று 'லங்கா தீப பத்திரிகை தெரிவித்துள்ளது.

வாக்குச்சாவடி ஒன்றில் ஐக்கிய தேசியக்கட்சி பிரதிநிதியை நூற்றுக்கு மேற்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளாகள் பயமுறுத்தினர் என்றும் ரூபவாஹினியில் தேர்தல் பிரசாரம செய்யும் போது சந்திரிகா குமாரதுங்காவுக்கு மற்றைய அபேட்சகளி

(6-ம் பக்கம் பார்க்க)

## தொண்டார குடும்ப ஊழலை விசாரிக்க மறுப்பு

(கொழும்பு)

அமைச்சர் எஸ். தொண்டமான் குடும்பத்தினரால்புரிந்ததெனக் கூறப்படும் ஒருகோடி ரூபா ஊழல் விவகாரத்தை அரசாங்கம் விசாரிக்க முடியாது என்று அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையோ, அமைச்சர் எவரையுமோவிசாரிக்க வேண்டுமானல் சபாநாயகரின் அனுமதி பெறவேண்டும். அதனல்

(6-ம் பக்கம் பார்க்க)

★ விடுதலைப்புலிகளுடன்

# சமாதான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அரசு தீர்மானம்!

## அமைச்சரவை பேச்சாளர் தகவல்

[கொழும்பு]

விடுதலைப்புலிகளுடனை சமாதானப் பேச்சுக்களை விரைவில் மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனல் சமாதானத்துக் குழு யாழ்ப்பாணம் செல்லும் திகதிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இவ்வாறு அமைச்சரவை பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்றபின் இடம்பெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நேற்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயேமேற் கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழீழ விடுதலைப்புலிகள் இம்மாதம் 13-ம் திகதி தாமாகவே அறிவித்துள்ள போர் நிறுத்தம் பற்றி இது

(6ம் பக்கம் பார்க்க)

## "நல்லெண்ண சமிக்ஞைகளை அரசு புரிந்துகொள்ளவேண்டும்"

### அரசியல் பொறுப்பாளர் கருத்து

[யாழ்ப்பாணம்]

பொதுசனஐக்கிய முன்னணி அரசுக்கு பொதுமக்கள் பூரண ஆதரவைக் கொடுத்துள்ளார்கள். இந்த நல்லெண்ண சமிக்ஞைகளைப் புரிந்துகொண்டு சந்திரிகா அரசு புத்திசாலித்தனத்துடனும் புரிந்துணர்வுடனும் நடந்துகொள்ள வேண்டும் இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(6-ம்பக்கம பார்க்க)

## பத்து தொன் ஆயுதங்கள் புலிகளுக்கு வருகிறதாம்!

### அரசு உஷார் நிலையில்

(மணிலா)

அடையாளம் தெரியாத துறைமுகம் ஒன்றிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சுமார் பத்து தொன் எடையுடைய போர் ஆயுதங்கள் கப்பலில் வந்து கொண்டிருப்பதாக கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை ஒன்றினை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது.

இதனை முறியடிப்பதற்கு இலங்கை அரசு இந்தியா உட்பட அருகாமை நாடுகளின உதவியை நாடியுள்ளதாகவும் மேற்படி செய்திகள் தெரிவிக்கின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சு ஆரம்பித்ததற்கு வரவேற்பு

[கொழும்பு]

ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா குமாரதுங்காவின் வெற்றிக்கு இலங்கை மாத்திரமல்ல, உலகமே மகிழ்ச்சியாக வரவேற்றுள்ளதற்கு காரணம், வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததே என்று 'லக்பிம' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

'லக்பிம, மேலும் தெரிவித்

(6ம் பக்கம் பார்க்க)

## அமைச்சு ஒழுங்கீனங்கள் குறித்து விசாரணைகள்

(கொழும்பு)

முன்னைய ஆட்சிக்காலத்தின் போது தனியார் மயப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அமைச்சு ஒன்றில் இடம்பெற்றதாக கூறப்படும் ஒழுங்கீனங்கள் குறித்து விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு நிய

[6ம் பக்கம் பார்க்க]

## மொறட்டுவ பல்கலைக்கழகம் நாளை திறக்கப்படும்

(கொழும்பு)

மொறட்டுவை பல்கலைக்கழகம் நாளை 18ம் திகதி மீண்டும் திறக்கப்படும்.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன நேற்று முன்தினம் கூடிய விசேட கூட்டத்தில், பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பதென

(-ம 6பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் 2 இராணுவம் உயிரிழப்பு

[மட்டுநகர்]

மட்டு மாவட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் உயிழந்துள்ளனர்.

மட்டு, பிரதேச செயலகத்திற்கு அண்மையில் காவல்

(6-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கவானெலி நிலைய வேலைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இரணவிலவில் 'வொய்ஸ் ஒவ்அமெரிக்கா' நிலையம் நிறுவுவதை, மீள் பரிசீலனை செய்வதற்கு அமைச்சரவை மட்டத்தில் ஒரு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதனல் இரணவில அமெரிக்க வானெலி நிலைய அமைப்பு வேலைகள் ஒரு மாதத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு கடந்த அரசாங்கம் இந்த

(2ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி, மன்னர் கடலில் மீனவர் மீது கடற்படை தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பகுதியிலும், மன்னார் அரிப்புக் கடற்பகுதியிலும் மீனவர்கள் மீது நேற்று கடற்படையினர் கடும் தாக்குதல்களை நடத்தினர்கள். இத்தாக்குதலில் மீனவர் ஒருவர் காணமற்போயுள்ளார். இவரது கட்டுமரத்தின் இயந்திரம் சிதைந்த நிலையில் கரை ஒதுங்கியது.

கட்டைக்காடு பகுதியிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று இத்தாக்குதலை மேற்கொணடது.

இச்சம்பவத்தில் 47வயதான கந்தையா சக்திவேல் என்ற மீனவர் காணமற்போயுள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**THE LIFE OF SIR. PON RAMANATHAN**

Covers the Biography of Sir Pon Ramanathan during a crucial period in the History of Ceylon 1910 1930 from the inimitable pen of Mr. M. Vythilingam. Not be mised by scholors & students of the History of Ceylon Limited copies avaiaple. Milkwhite. (A 4503)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டைக்கு கல்லுண்டாயூடாக போகும் வழியில் ஆ. மகேந்திரராஜன் 611642954 V இலக்க அடையாள அட்டையும், வரி அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆ. மகேந்திரராஜன். வட்டு. மேற்கு (கண்ணகை அம்மன் கோவிலடி) என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(சி-1318)

15-11-94 அன்று நாச்சிமார்கோவிலடியில் வெ. வடிவேலு, வெ. சதிரவேலு என்னும் இரு பெயருடைய இல. 382170164 V அடையாள அட்டையுடனும், ஒரு தொகைப் பணத்துடனும் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் வெ. வடிவேலு, 29, அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கும்படி மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-1317)


### அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி நிலையத்தாரோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் மீள்பரிசீலனை செய்யப்பட இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவில் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அமைச்சர் லக்ஸ்மன் ஜயக்கொடி அமைச்சர் சி. வி. குணரத்ன ஆகியோர் அங்கம் வகிக்க இருக்கின்றனர். (ம-பி)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைத் திறன் கல்வி செய்முறைப்பயிற்சியை இன்று வரை பெறுத, சண்டிலிப்பாய், உடுவில். சங்கானை, கோப்பாய் கோட்டங்களுக்கான பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மேற்படி பயிற்சி 17, 18, 19, 20ம் திகதிகளில் யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக கோட்டங்களின் சைவத்துறைப் பரிசளிப்பும் சைவாசிரியர், சைவநெறித் தொண்டர் கழகங்களின் அங்குரார்ப்பணமும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 8-30 மணிககு யாழ் நல்லூர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறும்,

அருளுரையை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்துவார். முதன்மை விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் செல்வி தி, பெரியதம்பியும் சிறப்பு விருந்தினராக திரு, க. கனகராசாவும் கலந்துகொள்வார்கள்.

0 0 0

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன ஐயனார் கோவிலின மாதாந்த சுமங்கலி திருவிளக்குப் பூசைகள் இன்று மாலை 5-30 மணிக்கு விசேட அவிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடனும் இடம்பெறும், -154

0 0 0

(கொழும்புத்துறை)

உரும்பராய் பர்வதவத்தினி அம்பாள் கோவிவின்மாதாந்த திருவிளக்குப் பூசை இன்று பிற்பகல் 4-00 மணிக்கு விசேட அபிஷேகப் பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். -154

0 0 0

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவகுருநாதகுரு பீடத்தின் அனுசரணையுடன் இன்று 17ம் திகதி பி. ப. 3-30 மணிக்கு அறவாழ்வு என்னும் பொருள் பற்றி இளைப்பாறிய அதிபர் கா. கணேசநாதன் விரிவுரை நிகழ்த்துவார். கந்தர்மடம் 18, குமாரசாமி வீதி வேதாந்த மடத்தில் இவ் விரிவுரை இடம்பெறும். -க

# சேதமடைந்த அழிந்த ஆலய விபரங்களை அனுப்பக் கோரிக்கை

(மானிப்பாய்)

1983 ஜூலைமுதல் 31-10 94 வரை வன்செயல்களினால் சேதமடைந்த அழிக்கப்பட்ட இந்துக் கோயில்கள் சம்பந்தமான விபரங்களை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து சமய கலாசார அலுவல்கள் மேலதிக செயலாளர் கோரியுள்ளார்.

இதுசம்பந்தமாக பின்வரும் விபரங்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பிரதேசச் செயலாளர்களிடமிருந்து கோரியுள்ளதால் சம்பந்தப்பட்ட இந்துக் கோவில்களின் நிர்வாகிகள் இவ் விபரங்களைத் தத்தமது கிராம அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலர்களுக்குஉடனடியாக அனுப்பி அதன் பிரதியை இந்துசமயப் பேரவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விபரங்களை அனுப்புவோர் ஆலயத்தின் பெயர், திணைக்களப் பதிவு இலக்கம், முகவரி கிராம அலுவர் பிரிவு, திருத்துவதற்கான செலவு, மதிப்பீட்டுத் தொகை என்பனவற்றை விபரமாக குறிப்பிடுமாறும் மேற்படி பேரவை கேட்டுள்ளது. 71.ரி

### மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்டத்தில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளது. திருநெல்வேலி, சுன்னாகம், சங்கானை போன்ற சந்தைகளில் கடந்த சில தினங்களாக கத்தரிக்காய், பாகற்காய், கரட், பயித்தங்காய், பூசனிக்காய் ஆகிய பல்வேறு மரக்கறிகள் மிகவும் அதிகரித்த விலைகளில் விற்கப்பட்டு வருகின்றன. -72

### நாய்களுக்கு தடுப்பூசி

(நெல்லியடி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் கடந்த வாரம், இன்பருட்டி, திக்கம், அல்வாய் போன்ற பகுதிகளில் வைத்து நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளன. 160

### சான்றிதழ் வழங்கல் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத்தலைமயகத்தினால் நடாத்தப்பட்ட முதலுதவிப் பரீட்சையில்சித்தியெய்தியோருக்கான சான்றிதல் வழங்கலும், யாழ். கிளையினால் வெளியிப்படும் 10வது சஞ்சிகை வெளியீடும் இன்று 17ம் திகதி யாழ். கிளைத் தலைமையகத்தில் த. சிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பரதமவிருந்தினர்களாக வணபிதா எஸ். ஏ, மைக்கல் சாமி, திரு. எஸ். கனகசுந்தரம், திரு. எஸ். ஜே. செல்லத்துரை ஆகியோா கலந்துகொள்ளவுள்ளனர்' -ரி

## இருத்தம்

(யாழ்ப்பாணம்)

16 - 11 - 1994 அன்று பிரசுரிக்கப்பட்ட தமிழீழ மீட்பு நிதி மீளளிப்புத் தொடர்பான தொடர்பு இலக்கங்களில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐப்பசி மாதத்திற்குரிய இலக்கம் யா/கோ/ 931ற்குப் பதிலாக யா/கோ/ 938 என தவறுக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐப்பசி மாதத்திற்குரிய இலக்கம் யா/ வே/ 842 ற்குப் பதிலாக யா/வே/742 என பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை யா/ கோ/ 931 என எனவும், யா/வே/ 842 என வும் திருத்தி வாசிக்கவும்.

16 - 11 - 1994 அன்று பிரசுரிக்கப்பட்ட தமிழீழ மீட்பு நிதி தொடர்பான தொடர்பு இலக்கங்களில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐப்பசி மாதத்திற்குரிய இலக்கம் யா/யர/ 1767 என்ற இலக்கம் தெளிவில்லாமல் இருந்தன என்பதை தெரிவித்துகொள்கிறோம்.

# 5000 கோடி ரூபா செலவில் அனல் மின் சாரம்

(கொழும்பு)

இலங்கையில் அனல்மின் சாரம் தயாரிப்பதற்கு சுமார் ஐயாயிரம் கோடி ரூபாவில் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர் மின்சாரம் தொடர்ந்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு நிலக்கரியை வைத்து இந்த அனல் மின் சாரம் தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ரி

## பலத்த மழையினால் அகதி முகாம்கள் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் பலத்த மழையினால், சண்டிலிப்பாய் பிரதேசச செயலர் பிரிவில் வசிக்கும் இடம் பெயர்ந்த மக்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

கட்டுடை, நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய்ப் பகுதிகளிலுள்ள பல அகதி முகாம்களின் சிறு குடிசைகளில் ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாழ்ந்த பகுதிகளிலுள்ள முகாம்களில் மழைநீர் தேங்கி நின்று சேறும் சகதியுமாகத் தொற்று நோய்கள் ஏற்பட ஏதுவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விறகுத் தட்டுப்பாட்டினாலும், மழையில் விறகுகள் நனைந்துவிடுவதாலும் சமையல் செய்யமுடியாது வருந்துகின்றனர் -72

### கிணற்றுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

காணி அபிவிருத்திப் பேமிற்றில் அரை ஏக்கருக்கு மேற்பட்ட விவசாயக் காணி உடையவர்களுக்கு உணவுற்பத்தித் திட்டத்தின் கீழ் கிணறு வெட்டுவதற்கும் கட்டுவதற்குமென்று பணம் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிணற்றுக்கு ரூபா 28,000 வரை ஒதுககீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது இப்பணம் பகுதி பகுதியாக செய்த வேலைக்குரியதாகக் கொடுபட இருப்பதாக அறியக் கூடியதாய் உள்ளது. (161)

# மருந்து வகைகளை கப்பலில் எடுத்துவர ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதாரப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு, 1994ம் ஆண்டுக் கடைசிக் கந்தாயத்திற்கான மருந்து வகைகளைக் கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாரி காலத்தில் மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் இப்பிராத்தியத்தில் அதிகரித்துக் காணப்படுவதால், அவற்றுக்கான மருந்து வகைகளையும் விரைவில் அனுப்பி வைப்பதற்கு கொழும்பில தங்கியுள்ள யாழ். சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அறியப்படுகிறது

இன்னும் இரு வார காலத்திற்குள், இந்த மருந்து வகைகள் இங்கு வந்து சேர்ந்துவிடுமென்றும் எதிர்பார்க்கப்படுவதாக யாழ். சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -72

# தமிழகத்தில் புலிகள் அச்சுறுத்தல் குறையவில்லை

— ராஜேஷ் பைலட்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறைவது போல் காணப்பட்டாலும் எச்சமயத்திலும் விடுதலைப்புலிகள் தலையெடுக்கும்நிலை ஏற்படலாம்என இந்திய மத்திய உள்துறை இணையமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தமிழக அரசு விடுதலைப் புலிகளை ஒடுக்கும்விடயத்தில் இன்னும்தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பதவியேற்றதையடுத்து இந்திய-இலங்கை உறவுகள் மேலும் வலுவடையும் எனத் தெரிவித்தார். (க-இ)

# அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் கலைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். அமெசூர் மெய்வல்லுநர் சங்கம் கலைக்கப்பபட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முன்னர் மெய்வல்லுநர் சங்கம் செயற்பாடற்ற நிலைக்குச் சென்றதை அடுத்து யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது.

கடந்த 5ம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் யாழ். அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் திரு. என். பஞ்சலிங்கம் தலைமையில், செயலாளர் திரு. வி.ரி. சிவலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் யாழ். அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தைக் கலைப்பது என்றும் சங்கத்தின் சொத்துக்கள், பதிவுகள் மற்றும் இதுவரை காலமும் வீரர்கள் நடாத்திய சாதனைகள் பற்றிய பட்டியல் ஆகியவற்றை யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவிடம் கையளிப்பது எனவும ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு செயற்படுத்தப் பட்டது.

இனிவரும் காலத்தில் யாழ். மாவட்டத்தில் மெய்வல்லுநர் நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கமே மேற்கொள்ளும் என்றும் யாழ். மாவட்டத்திலுள்ள மெய்வல்லுநர் துறையில் ஈடுபாடுள்ள கழகங்கள் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தில் இணைந்துகொள்ளலாம் என்றும் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு அறிவித்துள்ளது. -சி

பணம் எமக்குத் தேவை எனில்
பணி எமது தேவை

# தொண்டமானின் நெருங்கிய சகாவே சந்திரிகாவுக்கு லஞ்சம் கொடுக்க முனைந்தார்?

(கொழும்பு)

''இ. தொ. கா.வின் ஆறு அம்சக் கோரிக்கைகளை பொ. ஐ. மு. ஏற்றுக் கொண்டுவிட்டதினாலேயே ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகாவை தான் ஆதரிப்பதாக திரு. தொண்டமான் கூறியது முற்றுமுழுதான பொய்.''

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளியாகும் 'சரிநிகர்' வாரப் பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில் தெரிவித்துள்ளது. இதுபற்றி அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்:

திரு. தொண்டமானின் ஆறு அம்சக் கோரிக்கைகளை பொ. ச. மு உடனடியாகவே ஏற்றுக் கொண்டுவிட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக அமைச்சர் பதவியும் திரு. தொண்டமானுக்கு வழங்குவதற்கும் திருமதி சந்திரிகா உடன்பட்டார், இதன் அடிப்படையில் திரு. தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இறுதி நேரம்வரை திரு. தொண்டமான் திருமதி சந்திரிகாவை ஆதரித்து எந்த ஒரு அறிக்கையும் வெளியிடாததினால் பொ. ச மு. பிரமுகர்களிடையே பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியதுடன் திரு. தொண்டமானின் அமைச்சர் பதவியை உடனடியாகப் பறித்து, அவர் கடந்த காலங்களில் செய்த ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துமாறும் திருமதி சந்திரிகாவுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது.

இவ்விடயம்பற்றி உடனடியாக இந்தியாவில் இருந்த தொண்டமானுக்குத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஐ. தே. க அரசில் திரு. தொண்டமான் அமைச்சராக இருந்தபோது மேற்கொண்ட லஞ்ச, ஊழல் மோசடிகளிலிருந்து புதிய அரசிடம் இனித்தப்பவே முடியாது என்பதை உணர்ந்த திரு. தொண்டமான், ஜனாதிபதித் தேர்தலின் இறுதிக் கட்டத்தில் பொ. ச. மு. தனது ஆறு அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுவிட்டதினால் ஜனாதிபதித் தேர்தலில் இ. தொ. கா. திருமதி சந்திரிகாவை ஆதரிக்கிறது என்று இந்தியாவிலிருந்தே அறிக்கைவிட்டார். இதை சந்திரிகா அரசு உடனடியாக ரூபவாஹினி, மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள்மூலம் அறிவிப்பு செய்தது.

ஐ. தே. க.வைப் போலவே திரு. தொண்டமானின் பல மோசடிகளுக்கு துணையாக நின்று, மலையகத் தமிழ்மக்களின் வாக்குகளை தம்வசம் வைத்துக் கொள்ள பொ. ச. முன்னணியும் முயற்சிக்கிறதா? என்று அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் திரு. தொண்டமான் மேற்கொண்ட பல மோசடிகள், ஊழல்கள் பற்றி மேற்படி பத்திரிகை கீழ்க்கண்டவாறு வர்ணிக்கின்றது.

அமைச்சர் தொண்டமானின் பேரன் ஆறுமுகமும், பேத்தியும் தமிழகத்தில் 'ஏயர் லங்கா' நிறுவனத்தின் முகவர்களாக 1990ம் ஆண்டிலிருந்து நியமிக்கப்பட்டதுடன். 'ட்ரான்ஸ் லங்கா ஏயர் ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட்' என்ற நிறுவனத்தையும் தற்போது இயக்கி வருகின்றனர்.

இந்த நிறுவனத்தில் ஓடர் செய்யப்படும் டிக்கட்டுகள் அரசியல் செல்வாக்கினால் எந்தவிதத் தடங்கலுமின்றி வழங்கப்பட்டது. இச்செயல் ஏயர்லங்கா செயல்பாட்டுக்கு முற்றிலும் முரணானது. அத்துடன் இந்த தனிப்பட்ட நிறுவனம் இயங்கிவந்த கட்டிடத்துக்கு வாடகைப் பணமாக மாதாந்தம் இரண்டு லட்சம் இந்திய ரூபாவாக ஏயர் லங்கா நிறுவனமே செலுத்தி வருகின்றது. அத்துடன் இந்த நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கான சம்பளத்தையும் இந்த நிறுவனத்துக்கு ஏற்படும் மற்றைய செலவுகளையும் ஏயர் லங்கா நிறுவனமே மாதாந்தம் வழங்கி வருகின்றது.

1994-10-31ம் திகதிவரை மேற்படி நிறுவனம் ஏயர்லங்காவுக்கு 2 74 கோடி இந்திய ரூபாய்களை நிலுவையாக செலுத்த வேண்டி இருக்கிறது. புதிய அரசு பதவிக்கு வந்ததினால், ஏயர்லங்கா கொடுத்த நெருக்கடியினால் 1 1 கோடி இந்திய ரூபாய்களை இந்த நிறுவனம் வழங்கியது.

திரு. தொண்டமான் பொ. ச. முன்னணியுடன் இணைந்தவுடன் இந்த நிறுவனத்தின் தற்போதைய கொடுப்பனவு 2.73 கோடி இந்திய ரூபாய்களாக அதிகரித்துவிட்டது.

திருமதி சந்திரிகா பிரதமராகப் பதவியேற்றவுடன் பிரபல வர்த்தகர் 5 கோடி ரூபா லஞ்சம் வழங்க முற்பட்டதாகவும் விரைவில் அதனை தான் அம்பலப்படுத்துவதாகவும், திருமதி சந்திரிகா பத்திரிகை மூலம் அறிவித்தார். இதிலும் திரு. தொண்டமானின் முக்கிய சகா என்று கருதப்படும் வர்த்தகரே ஈடுபட்டதாக தற்போது தெரியவந்துள்ளது

இதுபற்றி தெரிவிக்கையில்; 600 மில்லியன் டொலர் பெறுமதியான நிர்மாண வேலை ஒன்றுக்கு பல் தேசிய நிறுவனங்களிடம் ரெண்டர் கோரப்பட்டது. இதில் மூன்று நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. இதில் ஒன்று, பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு மிக நெருக்கமான ஒருவருடையது. மற்றையது திரு. தொண்டமானின் சகா என்று கருதப்படுபவருடையது.

இந்த ஒப்பந்தம் திரு. தொண்டமானின் சகா என்று கருதப்படுபவரின் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டால் திரு. தொண்டமானின் ஆதரவு ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகாவுக்கு உறுதியாக வழங்கப்படுமென்றும் அத்துடன் பொ. ச. முக்கு கமிஷனாக 5 கோடி ரூபா தரப்படுமென்று திரு. தொண்டமானின் தூதுவர் திருமதி சந்திரிகாவுக்குத் தெரிவித்ததாகவும் தற்போது தெரியவந்துள்ளது.

ஆனால் இந்த ஒப்பந்தம் பற்றி எதுவித முடிவையும் மேற்கொள்ளவில்லை என்றும் செய்திகள் தெரிவிப்பதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

-வி-சி

---

## மாவீரர் நாளை ஒட்டி எழுச்சிபூர்வ ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கும் வகையில் யாழ். குடாநாடு எங்கும் எழுச்சி பூர்வமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. மறைந்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில் மாவீரர்களின் வீரகாவியங்களைச் சித்தரிக்கும் ஓவியங்கள் வரையப்பட்ட அலங்கார வளைவுகள்குடாநாட்டின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்தினர் ஆவரங்கால் பகுதியில் பிரமாண்டமான மாவீரர் வளைவு ஒன்றைவெகு சிறப்பாக அமைத்துள்ளார்கள், இம்மாவீரர் வளைவில் மாவீரர்களின் போர் நிகழ்வுகள் மற்றும் போராட்ட வரலாறுகளைச் சித்தரிக்கும் வகையில் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது

இம்மாவீரர்களை நினைவு கூரு முகமாகவும். பொதுமக்கள் சென்று அஞ்சலி செலுத்துவதற்கு வசதியாகவும் குடாநாட்டில் பல பகுதிகளிலும் இம்மாவீரர்களின் உருவப் படங்கள் வைப்பதற்கான பெரிய பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்றுடலிலும் சுன்னாகம் சந்தைப்பகுதியிலும் பிரமாண்டமான பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாவீர தினத்தை முன்னிட்டு மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஆரமபமானது. இந்நிகழ்வுகள் எதிர்வரும் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. இந்நாட்களில் யாழ் குடாநாட்டில் ஒவ்வொரு வட்டவைப் பிரிவுகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன. வீதிகள், பொது இடங்கள், சுற்றுடல் சிரமதான மூலம் புனரமைக்கப்படவுள்ளது. இந்நாட்களில் சகல வீதிகளும் சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்படுவதுடன் மாவீரர்களை நினைவுகூரும் கருத்தரங்குகளும் தெருக்கூத்துகளும் இடம்பெறும்.

(162-சி)

---

## மாவீரர் எழுச்சிவார கூட்டங்கள், சிரமதானங்கள்

[யாழ்ப்பாணம்]

மாவீரர் நாளையொட்டி இன்று 17ம் திகதி இடம் பெறும் சிரமதானங்கள், யாழ் அருள்மாதா சனசமூக நிலையம் 250 யார் போக்குவரத்து வசதிக்கு அமைத்தல், பளை முல்லையடி ச. ச, நி. சூழல் துப்பரவு பேணல்.

தீவகக் கோட்டம்: யாழ் ஸ்ரீபன் குடியிருப்பு, யாழ். முஸ்லீம் பகுதி, நவாலி குடியிருப்பு, வட்டுக்கோட்டை வைரவர் கோவிலடி துப்பரவு செய்தல்.

### கூட்டங்கள்

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம்ச. ச. நி. வண்ணார்பண்ணை வள்ளுவர் ச. ச. நி. நீர்வேலி திலீபன் ச. ச. நி., கோப்பாய் குத்துனி முகாம், திருநெல்வேலி வாலையம்மன் ச. ச. நி, நல்லூர் கொண்டலடி ச. ச. நி, சாவற்காடு மகாத்மா ச. ச. நி, மானிப்பாய் மாவீரர் முகாம், வட்டுக்கோட்டை கலைநகர் நேருஜி ச. ச. நி, சித்தன்கேணி நாமகள் ச. ச. நி, இணுவில் கலாஜோதி ச. ச. நி.. இணுவில் பநத்தியடைப்பு பிள்ளையார் கோவிலடி, உடுவில்தெல்லிப்பளை கலைமகள் ச. ச. நி., மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் இரவு 7.30 மணிக்கும், புலோப்பளை அரசன் குடியிருப்பு மைதானம், கொடிகாமம் நாவலர் ச, ச. நி, கைதடி மேற்கு சேதுகாவலர் பாடசாலை ஆகிய இடங்களில் இரவு 7 மணிக்கும், உடுப்பிட்டி இமையாணன் அறிவாலய ச. ச. நி, அல்வாய்மேற்கு கரும்புலிகள் குடியிருப்பு, யாழ். முஸ்லீம் பகுதி, யாழ். ஸ்ரீபன் குடியிருப்பு, மயூரன் குடியிருப்பு, ஆகிய இடங்களில் இரவு 7.30 மணிக்கு கூட்டங்கள் நடைபெறும். ம

---

## "ஆலயங்கள் ஊடாக சமூகப்பணி மேம்படுத்தப்பட வேண்டும்"

### சிவத்தமிழ்ச்செல்வி வலியுறுத்து

[யாழ்ப்பாணம்]

''இந்துக்கள் தர்மப் பணிகளைத் துரிதப்படுத்தவேண்டிய காலம் இது. நாட்டிலுள்ள போர்ச் சூழ்நிலையாலும், வறுமையினாலும் மக்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். ஒன்றுமறியாத அப்பாவிக் குழந்தைகள் அனாதைகள் ஆக்கப்படுகின்றனர்''.

இவ்வாறு இந்து சமயப் பேரவைவெளியிட்டுள்ளஇந்து தர்மம் சஞ்சிகை வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் சிவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தனது தலைமை உரையில் மேலும் கூறியதாவது, 'இந்து ஆலயங்களும் இந்து மன்றங்களும் சிவப்பணியாக சமூகப்பணியை கணித்து தொண்டுபுரியும் காலம் இன்று ஏற்பட்டுள்ளது. இக்காலத்தை தொண்டு செய்வதற்கும் பணிபுரிவதற்கும் பயன்படுத்தவேண்டும். நடைபெறுகின்ற போரைக் கண்டு நாம் ஒருபோதும் தளரக்கூடாது. எமது சமூக சமயப் பணிகளை மேலும் தீவிரப் படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஊர்கள் தோறும் உள்ள ஆலயங்களினூடாகச் சமூகப்பணியை மேம்படுத்த தீவிரமாக உழைக்க வேண்டும். வளமுள்ள அறிவாற்றல் மிக்க சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு ஆலயங்களுக்கும் குறிப்பாக ஆத்மீகத் தலைவர்களுக்கும் உண்டு என்பதை அறங்காவலர்கள் மறந்துவிடக்கூடாது.

இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் பேசுகையில்: எமது மதம் வாழ்க்கையோடு இணைந்துள்ளதென்றும் இந்துமதம் இயற்கைக்கும் இயல்புக்கும் முரணான எதையும் கூறவில்லை என்றும் சமூக வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள இந்து மதத்தின் பெருமையை உலகில் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்றார்.

திருமதி கலைவாணி இராமநாதன், உடுவில் பிரதேசச் செயலாளர் திரு. ஆ. மகாலிங்கம், திரு. க. சிவபாலன், சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா, திருமதி மங்கையர்கரசி திருச்சிற்றம்பலம் திரு. சி. சக்திகிரிவன் ஆகியோரும் உரையாற்றினர்.

சி

---

## திருநெல்வேலியில் மாவீரர் நினைவாலயம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கத்தால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலய திறப்பு விழா எதிர்வரும் 21-ந் திகதி திருநெல்வேலிச் சந்தியில் நடைபெறவுள்ளது.

திரு. கா. சிவராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலனும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் திரு. டொமினிக், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்விட் ஈகைச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை திரு. சஞ்சை ஏற்றிவைப்பார். மாவீரர் நினைவாலயத்தை திரு. கரிகாலன் திறந்துவைக்க, தமிழீழ நிதித்துறையைச் சேர்ந்த அன்பு மாவீரர் உருவப்படங்களை திரைநீக்கம் செய்துவைப்பார்.

விழா இறுதியில் திருநெல்வேலி அபர்ணாலயாவின் ''போர்க்கால இராகங்கள்'' இசை நிகழ்வும் இடம்பெறும்.

-ரி

---

## நாவன்மைப் போட்டி

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு எதிர்வரும் 19-ம் திகதி நடைபெறவிருந்த நாவன்மைப் போட்டிகள் 20ம் திகதி ஞாயிறு காலை 9-00 மணி தொடக்கம் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதென்று, போட்டிப் பொறுப்பாளர் திரு. கா. கணேசதாசன் அறிவித்துள்ளார்.

154

# கார்த்திகை தீபத்தின் வரலாற்று சிறப்பு

இந்துக்கள் வாழ்வில் சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரியைகள் ஆகியன மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகை உற்சவம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

காாத்திகை மாதத்தில் திருத்திகை என்னும் விண்மீன் நிறைமதியோடு சேரும் நாளே கார்த்திகைத் திருவிழா என இந்துக்கள் தொன்றுதொட்டு நம்பி வருகின்றனர்.

மேலும் கார்த்கிகைத் திருநாளில் மரணமடைவோர் சுவர்க்கத்தை அடைவர் என்பது இந்துக்கள் மத்தியில் நிலவும் மற்ருெரு நம்பிக்கையாகும்.

சங்க காலம் தொடக்கம் இன்றைய 20:ம் நூற்ருண்டு வரை கார்த்திகை திருவிழாவிற்கு தமிழர் சிறப்பிடம் கொடுத்து வந்துள்ளளர் என்பதனை சங்க இல்க்கியங்கள் தொட்டு இன்றைய இதிகாசங்கள், இலக்கியங்கள், பக்திப் பாசுரங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

''வீதிகள் தோறும் மக்கள் விளக்குகள் வரிசை வரிசையாக வைத்துள்ளனர். ஊரே விழாவில் திளைத்துள்ளது. அவ்விழாவைக் கண்டு களிப்பதற்கு நீயும் வா'' என தலைவனது பிரிவால் துயருற்றிருக்கும் தலைவிக்கு தோழி ஒருத்தி கூறுவதாக சங்க இலக்கியமான அகநாநூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

''மகிழ்ச்சியில் திளைத்து ஆர்ப்பரித்து விழாக் கொண்டாடும் மகளிர் கார்த்திகை நாளில் ஏற்றி வைத்த விளக்கு வரிசையைப் போல இலவ மலர்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன என தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டியார் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சங்ககாலத்தை தொடர்ந்த பல்லவர் காலப்பகுதியில் வாழ்ந்த திருஞானசம்பந்தப் பெருமான் தனது பாடல் அடியில் ''கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள்'' எனக் குறிப்பிடுவதும் கார்த்திகைத் திருநாளை அவர் எவ்வளவு தூரம் போற்றி வழிபட்டார் என்பதும் நயங் கொள்ளத்தக்கது.

[திருக் கார்ததிகை தீபத்திருநாளையொட்டி இக கட்டுரை வெளியிடப்படுகிறது]

மேலும் சோழர் ஆட்சிக் காலப் பகுதியில் சிறப்பு வாய்ந்த இடமாக கருதப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் உள்ள பழையாறையில் அண்மையில் தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் கண்டெடுக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட அகல் விளக்குகள் அக்காலப் பகுதியில் மக்கள் கார்த்திகை திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்பது புலப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

திருவண்ணுமலையில் சிறப்புற இன்று வரை கொண்டாடப்பட்டு வரும் கார்த்திகைத் திருவிழா சோழப் பெருமன்னர் இராஜேந்திரன் காலத்திலேயே வழக்கத்தில் இருந்துவந்ததாக சோழர்கால இலக்கியங்கள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து அறியப்பட்டுள்ளதாக வரலாற்றறிஞர்கள் மஜூம்தார் பி. நீலகண்ட சாஸ்திரிகள் குறிப்பிட்டுள்ளதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

நீர்வை கணேஸ்

இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற கார்த்திகை விரதத்தை இந்துக்களாகிய நாம் சிறப்புற கொண்டாடி இறைவன் அருட்கடாட்சத்தைப் பெற்று உய்வோமாக.ா-க

# உளவியலின் தந்தை சிக்மண்ட் புறேய்ட்

கல்விக் கல்லூரிகளிலும் மருத்துவ துறையிலும் குற்ற ஆய்வு போன்ற வேறுபல துறைகளிலும் இன்று உளவியல் முக்கியஇடம் வகிக்கிறது. மனிதமனமானது எவ்வாறு செயற்படுகிறது என்பதை ஆய்வுசெய்து உளப்பகுப்பாய்வு (Pgych analysis) என்ற புதிய முறையினை உருவாக்கினார். எனவேதான் மனஇயக்க ஆராய்ச்சியின் தந்தை என இவர் பலரால் புகழப்படுகிறார்.

மனித நடத்தைகளை தீர்மானிப்பதில் உணர்வில் மனப்பாங்கு(Unconsciou Motives) முக்கிய பங்கினை வகிக்கிறது எனும் கொள்கையை விளக்கினார்.

உளப்பகுப்பாய்வானது உணர்விலி மனத்தில் அமிழ்ந்து மறைந்துகிடக்கும் மனக்கிளர்ச்சிகளையும், கடந்தகால அனுபவங்கள் போன்றவற்றையும் உணர்விலி மனத்துக்கு கொண்டுவந்து வெளிப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டதே உளச் சிகிச்சை முறையாகும். இதற்கு அவர் உளவசிய முறையினை (Hypnousm) கையாண்டார். இதனால் கோடிக்கணக்கான மனநோயாளர்கள் நன்மை பெற்றனர்.

குழந்தை வளர்ப்பு, கல்வி! சமூகவியல் போன்ற பலதுறைகளில் இவது உளவியல் கொள்கைகள் பல மாற்றங்களை செய்ய உதவியன.

கனவுகள், காதல் உறவுகள் உள் உணர்வுகள், பால் உணர்கள் போன்றவற்றை ஆய்வு செய்து பல நூல்களை எழுதினார்.

ம. கிருஷ்ணகுமார்

# விறகு விற்பனையால் மாதம் 2000 ரூபா பெறலாம்

[மணிசேகரன்]

''எங்களுக்கு நியாயமான தோட்டக்காணிகளுண்டு. அந்தத் தோட்டக்காணியின் நாலாபுறமும் கத்தரி, வெண்டி காய்த்துக்குலுங்கும், பிள்ளைகள் போய் பிடுங்கிக் கொண்டு வந்து சட்டி நிறைய சமைத்துத் சாப்பிடுவார்கள். யாழ்ப்பாணம் இடம் பெயர்ந்து வந்து காக்கிலோ, அரைக்கிலோ வாங்கி சமைத்துச் சாப்பிடுகின்ற நிலையைப் பார்த்துத்தான் சைக்கிளில் கொண்டுவந்துவிற்கின்றவிறகு தொழிலில் ஈடுபட்டேன்.''

இவ்வாறுவேலணையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து சைக்கிளில் விறகு ஏற்றிக்கொண்டு வந்து விற்கும் கண்ணுத்துரை கூறினார்.

அவர் தொடர்ந்து தமது தொழிலை விபரித்துக் கூறுகையில்:

முதல் நாள் காலை விறகுக்கு பளைப்பகுதிக்கு போவதென்ருல் அன்றிரவு நித்திரையே வராது. நடுச்சாமத்தில் எழுந்து பார்த்தால் சிலவேளைகளில் அதிகாலை ஒன்று ஒன்றரை மணியிருக்கும், அந்த நேரம் தொடக்கம் விழித்திருந்து அதிகாலை நாலுமணிக்கு சைக்கிள் எடுத்துப் புறப்படுவோம். சரியாக கொட்டடியிலிருந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு சரியாக நாலு இருபதுக்கு வருவோம் கைகடிப் பிள்ளையாரைக் கும்பிட்டு ஒரே பிடியாக புத்துர்சந்திக்கு சென்று அங்குள்ள கடையில் சின்ன கப்பால் ஒருகப்பால் வாங்கிகுடித்துவிட்டால் இந்த நாற்பது மைல் தூர பிரயாணக்களைப்புத் தீர்நது விடும்.

இப்பொழுதெல்லாம் விறகுகள் மிகக்குறைவு, மட்டை ஒருரூபா ஐம்பது சதம். பொச்சு ஒரு ரூபா. கொத்து விறகு என்ருல் கிட்டத்தட்ட 100 கிலோ இருக்கும் 150 ரூபா. 200 ரூபாவுக்கு வாங்கலாம். விறகு கிடைத்தால் அன்றே திரும்பி விடுவோம். இல்லையாலுல் அடுத்த நாள் தான் திரும்புவோம், அந்த மணலுக்குள் சைக்கிள் ஓடுவதென்ருல் உயிர் போய் உயிர் வரும்.

சில நேரங்களில் ஓடிவரும் போது ரயர் வெடிக்கும். அந்த நேரங்களில் சிலவேளை காசு இருக்காது. கடன்பட்டுத் திருத்தி ஒரு மாதிரி விறகு கொண்டுவந்தால் ஆட்கள் கேட்கிறவிலையில் மனிதனுகப் பட்டவன் இந்த தொழில் செய்வானு என்று ஒரு வெறுப்பு ஏற்படும். எங்களுடைய கஷ்டத்தை உணராது சில பேர் மோசமான முறையில் விலை கேட்பார்கள்.

ஒருமுறை சைக்கிளை நிறுத்திவிட்டு காட்டுக்குள் போய் விறகு வெட்டிக் கொண்டு வந்து பார்த்தபோது என்னுடைய சைக்கிளின் முன் றிம்மே இல்லை. யாரோ ஒருவர் தன்னுடைய சைக்கிள் காற்றுப்போனபடியால் இந்த 'றிம்மை' கழற்றிதன்னுடைய சைக்கிளில் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டார். இப்படியான ருசிகரமான சம்பவங்களுண்டு. சில நேரங்களில் றோட்டுக்களில் சரிந்து விழுகிற சம்பவங்களுமுண்டு.

பொதுவாகச் சொல்லப் போனுல் ஒருநாளைக்கு 60 ரூபா மட்டில் செலவாகும். கஷ்டமான பயணம். காற்றுக்காலம் என்ருல் சொல்லவே தேவையில்லை. இளையவர், முதியவர் கூட இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

என்னைப் பொறுத்தளவில் 2000 ரூபா விறகு விற்பனையால் பெறலாம். மாதாந்தம் 6000 ரூபா தேவையான குடும்பத்துக்கு இந்தக்காசு எந்த மூலைக்கு காணுமென்று அவர் ஆதங்கப்பட்டார்.

# தாய்க்குப் பசி என்றுலும் தப்பான செயலைச் செய்யற்க!

— டாக்டர் மு. வரதராஜன் —

செய்யும் செயல் புகழும் நன்மையும் தருமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டும். புகழும் நன்மையும் பயக்காத செயலை என்றும் செய்யாமல் விடவேண்டும். எவ்வளவு துன்பப்படுவதாக இருந்தாலும் தெளிந்த அறிவுடையவர்கள் இழிவு தரும் செயல்களைச் செய்யமாட்டார்கள். ''என்ன செய்தோம்!'' என்று பிறகு வருந்தவேண்டிய செயலை முன்னமே ஆராய்ந்து செய்யாமல் ஒழிக்கவேண்டும்; ஒரு வேளை தவறிச் செய்தாலும், மீண்டும் அத்தகைய செயல்களில் ஈடுபடாமற் காத்துக்கொள்வது நல்லது.

''என்றும் ஒருவுதல் வேண்டும் புகழோடு நன்றி பயவா வினை'' என்கிருர் திருவள்ளுவர்.

சில வேளைகளில் நல்ல நோக்கம் கொண்டு தகாத செயலைச் செய்ய நேர்வது உண்டு; ஒருவகையில் நன்மை விளைவதைக் கருதிக் குற்றமான செயலைச் செய்வதும் உண்டு அப்போது அதனுல் விளையும் நன்மையை கருதி அதனைச் செய்வது கடமையா? அல்லது குற்றத்தைக் கருதிக் கைவிடுவது கடமையா? வெவ்வேறு வகையாகக் கருதுகின்றவர்கள் உண்டு.

திருவள்ளுவர் கருத்துமிகத் தெளிவானது. பொதுக் கடமை சீர் பெறவேண்டுமென்பதையும், பிறர் நலத்தைப் போற்றவேண்டும் என்பதையும் மறக்காதவர்கள் ஒரு முடிவுக்கு வருதல் மிகமிக எளிது. திருவள்ளுவர் ஒரு எடுத்துக்காட்டைக் கூறி வழிவகுக்கிறார்.

பெற்ற தாய் பசியோடு வருந்துகிருள். அவள் பசியைத் தீர்ப்பதற்காக பழியான ஒரு செயலை (லஞ்சம் வாங்குவது முதலியவற்றுள் ஒன்றை) செய்யலாம் என்று தோன்றுகிறது. ஆனுல் அந்தச் செயல் பொதுக் கடமைக்கு இழுக்கானது; பிறர் நன்மைக்கு இடையூறானது. ஆகையால் சான்றோர்கள் பழிப்பார்கள், அதைச் செய்வதா? செய்யாமல் விடுவதா? மனச்சான்றையே கேட்க வேண்டும்.

செய்யவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தன் தாய் பசி தீர்த்து வாழ வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது. நல்லதே ஆனுலும் அது தன்னலம் தான். செய்யவேண்டாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பொதுக்கடமைக்கு இழுக்கு என்றும் பிறர் நன்மைக்கு இடையூறு என்றும் அஞ்சும் பரந்த நோக்கம் இருக்கிறது. ஆகையால் அதைச் செய்யாமல் விடுவதே நல்லது என்று திருவள்ளுவர் தெரிவிக்கிருர்,

''ஈன்ருள் பசிகாண்பான்
ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும்வினை?''

என்பது குறள்.

டாக்டர் மு. வரதராசன்

## பலதும் பத்தும்

### கடலில் திறமை

திராவிடர்களான தமிழர்களின் கடலாதிக்கம் இன்று நேற்று ஏற்பட்டத?

''வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே திராவிடர்கள் வணிகத்திற்காக கடற்பயணம் செய்தவர்கள். ஆரியர்கள் கடற்பயணம் பற்றிய செய்திகள் தெளிவில்லாதவை?¿'- இப்படி ''இந்திய வரலாறு'' என்ற நூலில் (பக்கம்-2) எழுதியுள்ளார்வட இந்திய பேராசிரியர் பனர்ஜி.

''திராவிடர்களின் அதி உன்னத சாதனை அவர்களது கடற் பயணங்களே!'' என எழுதினார், ''இந்தியப் பண்பாடு', என்ற நூலில் இன்னோர் அறிஞரான எஸ். வி. வெங்கடேஸ்வரா.

இவற்றை அறிந்துதானே, 'அவர்கள்' கடல் வலையத் தடைச் சட்டம் போட்டார்கள் என கேள்வி எழுப்புகிறார்கள் சிலர்[

— மயூரன்

யாழ். உதைபந்தாட்ட லீக்:

# உதைபந்தாட்டப்போட்டிகள் நாளை முதல் ஆரம்பம்

(தேவா)

யாழ். உதைபந்தாட்ட லீக் மழை காரணமாகவும், மைதான வசதியீனம் காரணமாகவும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இப்போட்டிகள் மூன்று நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும்.

நாளை 18-ம் திகதி போட்டியின் முதல் ஆட்டத்தில் அறிவொளியை எதிர்த்து தொடர்மாடியும், 2-வது ஆட்டத்தில் கிறீன் பீலட் கழகத்தை எதிர்த்து சென். அன்ரனீசும் மோதும்.

19-ம் திகதி சனிக்கிழமை ஆட்டத்தில் யங்ஸ்ரார் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் மோதும். 2வது ஆட்டத்தில் சென். மேரீஸ் கழகத்தை எதிர்த்து வைக்கிங்ஸ் கழகம் மோதும். 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆட்டத்தில் சென் நீக்கிலஸ் கழகத்தை எதிர்த்து சென். றேக்ஸ் கழகம் மோதும். 2-வது ஆட்டத்தில்

[5ம் பக்கம் பார்க்க]

# அவரை இன பயிர்ச் செய்கை

''இன்றைய காலகட்டத்தில் வடமாகாண மக்கள் தங்கள் உணவுப் பொருட்களுக்கு, கப்பலையோ, அல்லது எத்தனையோ இடையூறுகளுக்குள்ளாகிவரும் லொறி, படகுகளில் கொண்டுவரப்படும் உணவுப் பொருட்களையோ நம்பிவாழ வேண்டியுள்ளது. யுத்தம் காரணமாக எத்தனையோ பேர் அகதிகளாக்கப்பட்டு நிரந்தர வருமானமின்றி தங்கள் வாழ்க்கையினை நடாத்துகிருர்கள். இந்நிலையில் அவர்கள் போஷாக்கு உணவினைப்பற்றி எவ்வாறு சிந்திக்க முடியும். நாட்டின் தென்பகுதியில் தங்கியிராமல் எமக்கு வேண்டிய போஷாக்கு உணவு பெறவும், தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தவும் அவரைப் பயிர்ச் செய்கை ஓரளவு முக்கிய பங்கினை வகிக்கின்றது.

அவரையினப் பயிர்ச் செய்கை எனக் குறிப்பிடும் பொழுது நாம் முக்கியமாக உழுந்து, பயறு, கௌபி, சோயா என்பதனை கருத்திற் கொள்கிறோம்.

கே: குணரத்தினம்
உதவிப்பணிப்பாளர் யாழ்.
விவசாய திணைக்களம்.

### மணிவாக்கு

மற்றவர்களின் மனதை நிறைவு செய்யும் வகையில் ஒருவரின் கடமையும் செயலும் அமையப் பெற்ருல் அதுவே கடமையின் பரிசாகும்.

- சியார்க எலியட்

## நமது நோக்கு

### சோதனை மேற் சோதனையா?

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முப்பதாயிரம் தமிழ்க் குடும்பங்கள் வெள்ளத்தாற் பாதிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன.

அதனுல் - அம்பாறையில் மாத்திரம் பதினையாயிரம் மக்கள் அகதிகளாகி விட்டார்கள்.

பட்ட காலிலேயே படும் என்பதுபோல, ஏற்கெனவே பல துன்பங்களை அனுபவித்து வரும் தென் தமிழீழ மக்களுக்கு இயற்கையின் சீற்றங்களில் ஒன்ருன வெள்ளமும் கொடூரத்தை விளைவித்துள்ளது.

முதலிற் கல்லோயாத் திட்டம் என்றும், பின்னர் மகாவலித் திட்டம் என்றும் கூறிக்கொண்டு சிங்கள மக்களின் குடியேற்றம் நடாத்தப்பட்டதால் பாதிக்கப்பட்டது கிழக்கு மாகாணத் தமிழ முஸ்லீம் மக்களே!

அது மாத்திரமல்ல - இந்தக் குடியேற்றங்களைப் பாதுகாக்கவென எடுத்த இராணுவ நடவடிக்கைகளால் பல தமிழ், முஸ்லீம் குடும்பங்கள் அகதிகளாகிப் போன கண்ணீர்க் கதைகளோ பல!

அது மாத்திரமா? கிழக்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிருேம் என்ற மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்காக இராணுவம் எடுக்கும் நடவடிக்கைகள் தான் என்ன?

நாளாந்த வாழ்க்கையை நடத்த முடியாதளவிற்கு, இராணுவம் குவிக்கப்பட்டு கெடுபிடிகள் செய்து வருவதால் அந்த மக்கள் அனுபவித்து வரும் துன்பதுயரங்கள் கொஞ்ச நஞ்சமா?

மீன்பிடித் தடையாற் பாதிக்கப்பட்ட குடும்பங்களோ ஏராளம்; முக்கிய வருவாய் தரும் வேளாண்மையைக் கூட நிம்மதியாகச் செய்ய முடியாதளவிற்குக் கெடுபிடிகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

அகதி முகாம்களிலிருந்து மீளக் குடியேற்றப்பட்டவர்களோ, போதிய வசதிகளின்றி வாடும் காட்சியும் தெரிகிறது.

இந்தவேளையில் - மழை வெள்ளத்தால் அகதி மக்களின் வேதனை மேலும் அதிகரித்துள்ளது.

சோதனைகள் என்ற பெயரில் அடிக்கடி நடக்கும் சுற்றிவளைப்புகளும், கைது செய்தலும் வேதனைகளைத் தந்து கொண்டிருக்கும் வேளையில், மழை வெள்ளம் சோதனை மேற் சோதனையாகிவிட்டது விசனத்திற்குரியதே!

# இலங்கையில் தமிழ் மக்கள் தனியாட்சி நடத்தியுள்ளனர்

— ராவய தகவல்

(கொழும்பு)

இலங்கைத் தீவின் வரலாற்றில தமிழர்கள் இறைமையுள்ள சுயாதீனக் கோட்பாடுகளுடன் நமக்கே உரித்தான தனியாட்சியுடன வாழ்ந்துள்ளனர் என 'ராவய' சிங்கள பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப் பத்திரிகையில் மேலும் தெரிவிககப்பட்டுள்ள தாவது: பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பின்னரேயே இலஙகையில் ஒற்றையாட்சி உருவாகியது. இவ் உண்மையை சிங்கள இனவாதிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இலங்கையில் அந்நியர் ஆதிக்கம் ஏற்பட முன்னர் தமிழர்கள் சுயமான ஆட்சி ஒன்றை அமைத்தனர். இவ் ஆட்சி மிகவும் பலமானதாகவும் சுய கோட்பாட்டை உடையதாகவும் காணப்பட்டது.

அந்நியர் ஆட்சியின்போது கூட தமிழர்கள் தனியான ஆட்சியின் கீழேயே நிர்வகிக்கப்பட்டனர். ஆனுல் இந்நாடு சிங்கள வர்களுக்கு மட்டுமே உரியது என சில சிங்கள இனவாதிகள் எண்ணுகின்றனர்.

சிங்களவர்களை விட தமிழர்கள் தமது இறைமையைப் பாதுகாப்பதில் அதிக அக்கறையுடையவராக திகழ்கின்றனர். இன்று வரை அவர்கள் பின்பற்றிவரும் தேச வழமைச் சட்டம் இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

வடககு-கிழக்கில் இன்று நிலவுவது பயங்கரவாதமே எனவும் அதனை அடக்கவேண்டும் எனவும் சில சிங்கள இனவாதிகள் கூறுகின்றனர். அது தவறனதொரு கருத்தாகும்.

வடக்கு-கிழக்கிற்கு அனுப்பப்படும் இராணுவத்தினர் இனவெறியூட்டப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது. (கு-சி)

ஜனுதிபதி சந்திரிகா

# வடக்கு,கிழக்கு பிரச்னைக்கு உடன் தீர்வுகாணவேண்டும்

(கொழும்பு)

'வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படுமென ஜனுதிபதி சந்திரிகா உறுதி பகர்ந்தார் இதற்கு தீர்க்கமான முடிவை அவர் உடன் காணவேண்டும்''

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தனு திருமதி சந்திரிகாவின் வெற்றிகுறித்து கருத்து தெரிவிக்கையில் கூறினுர்.

அவர் மேலும் கூறுகையில்: லட்சக்கணக்கான மக்கள் அவரில் வைத்த நம்பிக்கையில் ஏகோபித்த ஆதரவை தெரிவித்துள்ளனர். மக்கள் வைத்த நம்பிக்கைக்கு பிழை போகாமல் திருமதி சந்திரிகா தெரிவித்திருந்தவற்றை அமுல்படுத்த வேண்டும். அரசியல் யாப்பு திருத்தம் மற்றும் ஜனநாயக முறைகளைக் கொண்டுவருவதோடு, பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்குமிடையே காணப்படும் இடைவெளியையும் அவர் நிரப்பவேண்டும் எனவும் மேலும்கூறினுர், கே-ரி

# அனுராவை மீண்டும் தம்முடன் இணைப்பதற்கு சிறிமா விருப்பம்

(கொழும்பு)

இலங்கை அரசியலில் பண்டாரநாயக்கா ரத்வத்தை குடும்பத்தினரின் ஆதிக்கம் நிலைப்பதற்கு அனுரா தமது கட்சிக்குள் மீண்டும் இணைந்து கொண்டால் தான் சாத்தியமாகும் என்று திருமதி சிறிமா கருதுகிருராம்.

அனுராவை மீண்டும் அரவணைக்க தாயார் சிறிமா தயாராகவுள்ளார். ஆனுல் கட்சி இன்று தாயின் கைகளில் இல்லை. மகள் சநதிரிகாவின் பூரண கட்டுப்பாட்டிலேயே கட்சி இருக்கிறது.

அனுரா மீண்டும் கட்சிக்குள் வந்து கோஷ்டி சேர்க்காமல் நாட்டுக்கு வெளியே தூதுவர் பதவியை வழங்க எண்ணும் சிறிமாவின் விருப்பதததை ஜனுதிபதி சந்திரிகா ஏற்றுக் கொண்டுள்ளார்.

சிறிமாவின் மூத்த மகள் சுனேந்திராவுக்குப் பிள்ளைகள் இல்லை. மகன் அனுராவோ இன்னும் திருமணம் செய்யவில்லை. சநதிரிகாவுக்கு இரண்டே குழந்தைகள். குழந்தைகள் குமாரதுங்கா பெயரைப் பயன்படுத்திஞல் பண்டாரநாயக்கா பெயரை பயன்படுத்துவது யார் என்ற ஆதங்கம் சிறிமாவிடம் ஏற்பட்டுள்ளது.

எனவேதான் அனுரா இன்றில்லாவிட்டாலும் நாளை கட்சிக்குள் வந்தால்தான் பண்டாரநாயக்கா பெயர் நிலைத்து நிற்கும் என்றும் சிறிமா கருதுகிருராம். -ரி

வடமத்திய மாகாணத்தில்

# சகல வசதிகளும் கொண்ட புதிய பல்கலைக்கழகம்

(கொழும்பு)

வடமததிய மாகாணத்தில் சகல வசதிகளையும் கொண்ட ஒரு பல்கலைக்கழகம் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக வெளிநாட்டு உதவிபெறும் சாத்தியம் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. இந்தப் பல்கலைக் கழகம் திறக்கப்பட்டதும் கூடுதலான மாணவர்கள் பட்டப் படிப்பிற்காக சேர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பல்கலைக்கழகம் மிகிந்தலையில் கம்உதாவ கண்காட்சி நடைபெற்ற இடத்தில் அமைக்கப்படும். அங்கு பல்கலைக்கழகத்திற்கான சகல வசதிகளும் இருப்பதால் பல்கலைக்கழகத்தை விரைவில் திறக்க அதிக சிரமம் இருக்க மாட்டாதென அரசு நம்புகிறது.

இதேவேளை மகா இலுப்பலம விவசாய போதனுபீடம் தொடர்ந்தும் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு வளாகமாக செயற்பட்டு வருமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் மருத்துவம் விவசாயம், பொருளியல், நீர்ப்பாசனம் என்பன உட்பட பல்வேறு பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. - சி

# மக்கள் நலனை பேணும் வகையில் இணையம் செயல்பட்டு வருகிறது

(யாழ்ப்பாணம்)

''கடந்த காலங்களில்யாழ். குடா நாட்டில் நடைபெற்ற போர் நெருக்கடிகளால் பல்வேறு பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் மத்திய பகுதிகளில் தஞ்சமடைந்த மக்களின் நலன்களைப் பேணும் வகையில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்கான வேலைத் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

யாழ், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நான்காவது ஆண்டு நிறைவையொட்டி இணைய பிரதி நிதிகள் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது,

இந்நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவிக்கையில், எமது நாட்டில்ஏற்பட்ட யுத்த சூழ் நிலையால்இடம்பெயர்ந்து நிர்க்கதியற்ற நிலையிலிருக்கும் மக்களின் நலன் காக்கும் வகையில் நிவாரணப்பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொணடு வருகிறது. நிவாரணப்பணிகள் மேற்கொள்ளல் சிறுவர்களிள் கல்வி மேம்பாடுகள் முன்னெடுத்துச் செல்லல் சுகாதாரம் பேணல் பற்றிய அறிவுறுத்தல்கள் வலுக்குறைந்தோருக்கான சுயதொழில் வேலைத் திட்டங்கள் போன்றவற்றை இதன் அங்கத்துவ நிறுவனங்கள்திட்டமிட்டுச்செயல்படுத்தி வருகின்றன.

இச்சந்திப்பின்போது இதில் கலந்து கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் கடந்த காலத்தில் தமது ஸ்தாபனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் வேலைத் திட்டங்கள் பற்றியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கும் புனர்வாழ்வுத் திட்டங்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினுர்கள். 162.ரி

யாழ். உதைபந்தாட்ட

(4 ம் பக்கத்தொடர்ச்சி)

அரியாலை ஐக்கிய கழகத்தை எதிர்த்து கிறீன்பீல்ட் அன்ரனிஸ் வெற்றிக் கோஷ்டிகள் மோதும். (வி-ரி)

### கலந்துரையாடல் பின்போடப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்[

நாளை 18ம் திகதி தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில நடைபெறவிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தால பின்போடப் பட்டுள்ளதெனவும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994–11–17**

வியாழன இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்தமருத்துவ குறிப்புகள்- சென்றவார தொடர்ச்சி
08-20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் யாழ். கால் நடை வைத்தியசாலை அத்தியட்சகர் திரு, தங்கராஜா அவர்களுடனுன செவ்வி
08-30 செய்திகள்
08-40 ஏட்டிலிருந்து ''உலக உலா'' என்ற சஞ்சிகையிலிருந்து ''அடிமைகள் நிறுவிய குடியரசின் அவலங்கள்'' எனும் கட்டுரை
08-50 மலரும் மொட்டுக்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைபெறும்

**1994–11–18**

வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகை செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்
08:00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## இராசி பலன்

17 - 11 - 1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 1)

சதுர்த்தசி மு. ப. 10-28 வரை, பரணி பி. இ. 2-37 வரை, இராகு காலம் பி.ப. 1-38 முதல் 3-08 வரை, சுப வேளை காலை 7-38 முதல் 9-08 வரை சர்வாலயதீபம். பூரணைவிரதம்.

மேடம்: பகை வெல்லுதல், தொழில் லாபம், பயண நன்மை.

இடபம்: பிறர் வஞ்சனை, குடும்பபிரிவு, அலைச்சல்.

மிதுனம்; அன்னியர் உதவி, தாயார்அறிவுரை, பணவரவு.

கடகம்: வார்த்தைக்கு கட்டுப்படல், மனஉறுதி, சுபவிரயம்.

சிங்கம்: பயந்து நடத்தல், மறதியான செயல், வீண் வார்த்தை.

கன்னி: சிறு விரோதம், கல்விச் செலவு, அகாலஉணவு.

துலாம்: காரிய பலிதம், உறவுமுறையில் மகிழ்ச்சி, தானதர்மம்.

விருச்சிகம்: தொழில் முதலீடு, கற்பனை, சகோதர பாசம்.

தனுசு: தன்நிலை இழத்தல், கண்டிப்பு, வாக்குப்பகை.

மகரம்: குழப்பமடைதல், துயரச் செய்தி, வீண் வம்பு.

கும்பம்: வருவாய்மேன்மை, தெய்வீகப்பணி, பாராட்டு.

மீனம்: பணியாள் துயரம், கோபவார்த்தை, குதர்க்கம்.

— ஜோஸ்யர்

# தொண்டாவைபதவிநீக்கினுல் ஐ.தே.க.மீது சட்டநடவடிக்கை

## இ. தொ கா. எச்சரிக்கை

(கொழும்பு)

தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியினுல் நீக்கப்படுவாராளுல், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தொண்டமானை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டமானின் விவகாரம் அவருக்கு எதிராகச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சிச் செயலர் தெரிவித்துள்ளார். இது பற்றித் தீர்மானம் எடுப்பதற்கு விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ம-ரி

## லஞ்ச ஊழல் ஆணைக்குழு டிசம்பரில் செயற்படும்

(கொழும்பு)

லஞ்சம் ஊழல் தொடர்பான நிரந்தர ஆணைக்குழு டிசம்பர் மாதம் 15ம் திகதியிலிருந்துசெயற்படவுள்ளதாக, நீதி அமைச்சர் ஜீ. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற ஒய்வுபெற்ற நீதியரசர் டீ. ஏ. பி. எஸ். விஜேசுந்தர தலைமையில் இயங்கும் ஆணைக்குழுவில் மேல்நீதிமன்றத்தின் ஒய்வுபெற்ற நீதியரசர் சிவா செல்லையா, பி. எம். டபிள்யூ, விஜேசூரிய ஆகியோர் கடமையாற்றுவார்கள்

இதேவேளை காணமற்போனோர்தொடர்பானமூன்று வெவ்வேறுஆணைக்குழுக்களின் ஆணையாளர்கள் பற்றி ஒரு வாரத்திற்குள் அறிவிக்கப்படும் எனவும்அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். கே-ரி

## படைகளின் பதவி மாற்றத்திற்கு காரணம்

(கொழும்பு)

சமாதானமுயற்சிகளுக்கு சில மூத்த இராணுவ அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருப்பதாலே அவர்களை பதவி மாற்றம் செய்ய ஜனுதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

அரசுக்கு ஆயுதம் கொள்வனவு செய்வதில் லஞ்சம் பெற்ற படை உயரதிகாரிகளும் விரைவில் மாற்றம் செய்யப்படுவர்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை புறக்கணித்திருக்கும் இராணுவம் நேற்றுமுன்தினம் மட்டு மாவட்டத்தில் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## நாடாளுமன்றத்தில் இ.தொ.க .பலம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பலம் மேலும் அதிகரிக்க இருக்கிறது.

முன்னுள் அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி, ஒஸி அபேகுணசேகர ஆகியோரின் இடத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் மேலும் உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் உறுப்பினர் பதவி கிடைக்க இருக்கிறதாம். இதன் பிரகாரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் தொகை 9ஆக அதிகரிக்கவுள்ளது.

தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக இருந்தபோதிலும், மற்றைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்தும் நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ம-ரி

## பிரதமரின் புதிய செயலாளர்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் ஹேமசிறி பர்னுண்டோ பிரதம மந்திரியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை கடற்படையின் தொண்டர் படைப் பிரிவில் ஆணைபெற்ற அதிகாரியாகவும் கடமையாற்றுகிருர் என்பது குறிப்பிடத்தக்கது. -ம

## ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் நான்காம் ஆண்டு நிறைவுவிழா நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும்.

## சவூதி அரேபிய இல. தூதரகத்தில் 500இலங்கைபணிப்பெண்கள் அனுதைகளாகதஞ்சம்;

(றியாத்)

சவூதி அரேபியாவின்றியாத் நகரில் 500க்கு மேற்பட்ட இலங்கைப் பணிப்பெண்கள் இலங்கை தூதுவராலயத்தில் அனுதைகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

வீட்டுப் பணிப் பெண்களாக சவூதி அரேபியா சென்ற இந்தப்பெண்கள் எஜமானர்களின் கொடுமைகளினுலும் மற்றும் ஏமாற்றப்பட்டமையினுலும் தாம்தொழில் செய்த வீடுகளிலிருந்து விலகி மேற்படி தூதுவராலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி அங்கிருந்து தப்பி வந்த இலங்கைப் பெண்ணை மாலினி என்ற 28வயதுப் பெண் ஒருவர் தெரிவிக்கையில் சவூதி அரேபியாவுக்கு தொழில் தேடிச்சென்று கடந்த இரண்டு வருடங்களாக ரியாத் நகரில் வீட்டுப்பணிப் பெணுகு கடமையாற்றி பல துன்ப துயரங்களுக்கு மத்தியில் ஆறு மாத காலம் தனது சம்பளத்தைக்கூட பெருது, ஆளைவிட்டால் போதும் என்ற எண்ணத்தில் நான் தப்பிவந்துவிட்டேன் என்னைப்போன்று ஐநூறுக்கும் அதிகமான இலங்கையைச் சேர்ந்த இளம் பெண்கள் ரியாத்திலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் தஞ்சம் புகுந்து பெரும் அவஸ்தைப்பட்டு வருகிருர்களென்று தெரிவித்தார். -71-ரி

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நூலகத்தைச் சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் இன்று காலை 8-30 மணிக்குத் திறந்துவைப்பார்,

## ஐ தே க தவிசாளராக ஹமீத் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தவிசாளராக ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் நியமிக்கப்பட்டிருக்கின்ருர்.

டாக்டர் ஏ. சி. எம். கலீல் அவர்களின் மறைவுக்குப் பின்னர் இந்தப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டிருந்தது தெரிந்ததே. ரி

## தேர்வு மதிப்பீட்டாளர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

முதனிலைத்தேர்வு பிரதம மதிப்பீட்டாளருக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பி. ப. 2மணிக்கும் இளநிலைத் தேர்வு பிரதம மதிப்பீட்டாளருக்காணகூட்டம் எதிர்வரும் 21ம் திகதி திங்கள்கிழமை பி. ப. 2 மணிகது நல்லூர் சி. சி. சாதனப்பாடசாலையில் நடைபெறவிருப்பதனுல் சகல கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் மதிப்பீட்டு நிலையப் பொறுப்பாளர்கள் பிரதம தேர்வாளர்கள் கட்டுப்பாட்டுத் தேர்வாளர்கள் முதன்மைத் தேர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார் -ரி

### மொறட்டுவ

[1ம் பக்கத் தொடர்ச்சி[

முடிவு எடுக்கப்பட்டது.

ஏனைய பல்கலைக் கழகங்களில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் போன்று தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா பயிற்சிக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மாணவர்களுக்கு உறுதியளித்தார். கே-ரி

### தொண்டா

(1-ம் பக்கத்தொடர்ச்கி]

தொணடமானின் ஊழல்விவகாரத்தை இதில் இருந்துநீக்கியுள்ளோம்' என்ருர். மரி

### நல்லெண்ண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை இனம்காணல் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினுர்,

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது: சிறிலங்கா அரசினுல் எமது மக்கள் மீது ஏற்றப்பட்டிருக்கும பல வகையான சுமைகளும் இறக்கப்பட வேண்டும். போக்கு வரத்து பாதைகள் எதுவித தடையுமின்றி பாவனைக்குத் திறந்து விடப்பட வேண்டும். எமது மக்கள் மேல் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டு சகல பொருட்களும் தங்கு தடையின்றி எமது பிரதேசத்தில் தாராளமாகப் பெறக்கூடியதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.''

சிறிலங்கா அரசானது திட்டமிட்ட வகையில் எமது மக்களை அடிபணிய வைப்பதற்கான . நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. சவாலை எதிர்கொண்ட எமது மக்கள் படிப்படியாக வளர்ச்சிபெற்று இன்று எமது சொந்தக் கால்களில் நிற்கக்கூடிய வகையில் வளர்ச்சி பெற்றுள்ளார்கள்.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் உரையாற்றுகையில் எமது விடுதலைப்போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இந்தக்கால கட்டத்தில் எமது பொருளாதாரவளர்ச்சியைக் கட்டி எழுப்புவதுஎமது எல்லோருடைய கடமையுமாகும் என்ருர். 162 ரி

### அமைதிப்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

துள்ளதாவது; காமினி திசநாயக்காவின் கொலை பேச்சுவார்த்தைக்கு ஒரு பின்னடைவாக இருக்கவில்லை என்றும், சமாதானம் மிகவும் அவசியமானது என்றும் மக்கள் வாக்குகள் மூலம் தீர்மானித்துள்ளார்கள். .ம

### மட்டு மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமையில் ஈடுபட்டிருந்த ராணுவ சிப்பாய் ஒருவர் தவறுதலாகதுப்பாக்கி வெடித்ததில் உயிரிழதார்.

மற்றைய இராணுவ சிப்பாய் கித்துள் மலை என்னும் இடத்தில் ஆற்றை கடக்க முற்பட்டவேளை நீரில் மூழ்கி உயிரிழந்தார். ரி

### ஜனுதிபதிக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி[

லும் பார்க்க 7 நிமிடங்கள் கூட ஒதுக்கியிருந்தமை ஆகிய முறைகேடுகள் இடம்பெற்றதாக ஐக்கியதேசியக் கட்சியினர் இந்த வழக்கை தாக்கல் செய்ய இருக்கிருர்களாம். ம-சி

### அமைச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் தர்மசிறி சேனுநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றி தெரிவிக்கையில்;

பல்வேறு நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதில் ஒழுங்கீனங்கள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் புடவை அனுமதி பங்கீட்டு ஒழுங்கற்ற நடைமுறைகள் இடம்பெற்றதாகவும் தெரிவித்தார். கேரி

### விடுதலைப்புலிகளுடன்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரை உத்தியோக பூர்வமாக அரசாங்கத்திற்கு தகவல் எதுவும் அறிவிக்கவில்லை, இருந்தபோதிலும் நிலவரத்தை உணர்ந்து அரசு சமானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க ஆர்வம் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஒரு வார காலத்திற்கு தாக்குதல் நடவடிக்கையை நிறுத்தியுள்ளனர். புதிய ஜனுதிபதிக்கு கிடைத்த அமோக வெற்றிக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டிருக்கக் கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். கேரி ம

### ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஐந்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இம்மாதம் 18-ம், 19-ம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நிகழும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்குத் தவருது சமுகம் தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஐந்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இம் மாதம் 18, 19-ம் திகதிகளில் மருதனுர் மடத்தில் இயங்கும் மகாஜனக் கல்லூரிக்கு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்குச் சமூகம் தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ரி]

### பத்து தொன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்செய்தியில் உண்மை இருப்பதாகவும் இராணுவ தரப்பின்ரும் ஒத்துகொண்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட தகவலையடுத்து இலங்கை கடற்பிராந்தியத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ரி)

### வடமராட்சி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதேவே , மன்னுர் அரிப்புக் கடற்பரப்பில் இரு பீரங்கிப் படகுகளில் இருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல்களினுல் கரையோரப் பகுதி மக்களின் பல குடியிருப்புக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன். கால்நடைகள் பலவும் காயமடைந்தன.

மன்னுர் அரிப்புக் கடற்பகுதியிலுள்ள கடற்படையினர், அடிக்கடி அப்பாவி மக்கள் மீதும் அவர்களின் குடியிருப்புக்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். -ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.